ISSN : 2455-0531

# இனம்

(இனம் இனத்தைச் சேரும்)

## பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர் : 2 இதழ் : 8, பிப்ரவரி 2017 Vol. II Issue 8, February 2017



## வ.சுப.மாணிக்கனாரின் நூற்றாண்டு சிறப்பிதழ்













சு.செல்வகுமாரன் I சேது.முனியசாமி I ப.திருஞானசம்பந்தம் I ஆ.மணி I மா.பரமசிவன்
I சு.நாகரத்தினம் I கடவூர் மணிமாறன் I ப.சண்முகராணி I இல.இராஜதுரை
த.சத்தியராஜ் I மா.சிதம்பரேஸ்வரர் I கு.பாக்கியம்

*Inam:International Research E_Journal of Tamil Studies*

Inam ISSN : 2455 - 0531

# இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
An Internationally Refereed e_ Journal of Tamil Studies

## பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
முனைவர் த.சத்தியராஜ்

## ஆலோசனைக்குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)

## ஆசிரியர்குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை) முனைவர் இரா.குணசீலன் (திருச்செங்கோடு)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோவை)
முனைவர் சி.இரவிசங்கர் (மதுரை)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (கேரளா)

## இதழாக்கமும் வெளியீடும்

முனைவர் த.சத்தியராஜ்
கோயமுத்தூர்
09600370671
inameditor@gmail.com
www.inamtamil.com

பிப்ரவரி 2017 மலர் : 2 இதழ் : 8
February 2017 Volume II Issue 8

# உள்ளே ...

**பேராசிரியர் வ.சுப.மாணிக்கனாரின் திறனாய்வுச் சிந்தனைகள்**
முனைவர் சு.செல்வகுமாரன் | 3

**வ.சுப.மாவின் அச்சேறிய நூல்களும் நிறைவேறா ஆசைகளும்**
சேது.முனியசாமி | 10

**வ.சுப.மா.வின் சொல்லாக்க முறைகள்**
முனைவர் ப.திருஞானசம்பந்தம் | 18

**வ.சுப.மாணிக்கனாரின் தொல்காப்பிய உரைநெறிகள்**
முனைவர் ஆ.மணி | 27

**பிற்கால நீதிநூல்கள்: வ.சுப.மாணிக்கனாரின் உரையியல்புகளும் நடைத்தன்மைகளும்**
முனைவர் மா.பரமசிவன் | 42

**தமிழ்க் காதலில் வ.சுப.மாணிக்கனாரின் ஆளுமைத் திறன்**
முனைவர் சு.நாகரத்தினம் | 56

**பதவிக்குப் பெருமை சேர்த்த மாணிக்கச் செம்மல்**
முனைவர் கடவூர் மணிமாறன் | 62

**மனிதநேயக் கல்வியின் அவசியம்**
முனைவர் ப.சண்முகராணி | 64

**மகாபாரதத்தின் கிளைக்கதைகளிலிருந்து 16ஆம் நூற்றாண்டில் உருக்கொண்ட காப்பியங்கள்**
இல.இராஜதுரை | 76

**இணையவழிக் குறுஞ்செயலி (Apps) உருவாக்கம்**
முனைவர் த.சத்தியராஜ் (நேயக்கோ) | 81

**ஆலயங்களில் ஐந்தின் பங்கு**
மா.சிதம்பரேஸ்வரர் | 90

**முத்துவேலழகனின் ஜன்மா நாடகம் (நூலறிமுகம்)**
முனைவர் கு.பாக்கியம் | 97

# புதவிக்குப் பெருமை சேர்த்த மாணிக்கச் செம்மல்

முனைவர் கடவூர் மணிமாறன்

இலக்கியமும் இலக்கணமும் முழுதும் கற்றாய்;
எல்லையிலாப் பெரும்புலமை இனிதே பெற்றாய்;
கலங்காமல் மயங்காமல் ஆய்வின் மூலம்
கவின்தமிழ்க்கே மணிமுடிகள் சூட்ட லானாய்;
நலம்சேர்த்தாய்; தமிழ்க்காதல் வள்ளு வத்தை
நற்றமிழ்த்தாய் கண்ணிரண்டாய் நல்க லானாய்!
பலருக்கும் வாழ்வளித்தாய்; பண்பால் அன்பால்
பயின்றோரின் உள்ளமெலாம் மகிழச் செய்தாய்!

சங்கநெறிச் சால்புகளைச் சாற்றி வந்தாய்;
சலியாத உழைப்பாலே பனுவல் தந்தாய்;
மங்காத மாத்தமிழின் மேன்மைக் காக
மாணிக்கக் குறள்தந்த மாணிக் கம்நீ!
வெங்கொடுமை தமிழுக்கே இழைத்தோர்வீழ
வீறார்ந்த புதுவிளக்கம் அளிக்க லானாய்;
எங்கும்வாழ் தமிழினத்தார்எழுச்சி கொள்ள
இனியபல கருத்துவிதை ஊன்றி வந்தாய்!

தமிழாய்வில் தனிக்கவனம் செலுத்தி வந்தாய்
தக்கோரை உருவாக்கிப் பெருமை கொண்டாய்!
'தமிழ்த்தாத்தா' என்றழைக்கும் சாமி நாதர்
தனிச்சிறப்பை உளமகிழப் பாடி நின்றாய்;
தமிழ்க்காதல் எனும்தலைப்பில் முனைவர்ஆய்வைத்
தகவுறவே ஆங்கிலத்தில் அளித்துப் பெற்றாய்!
தமிழ்நலமும் தமிழ்வளமும் சிறக்க வாழ்ந்தாய்;
தாம்பிறந்த சிவபுரிக்கே புகழைச் சேர்த்தாய்!

சொல்லாய்வுச் சுடரானாய்; ‘ஈனில்’ என்றாய்
சுவையாக உரையாற்றும் கலையில் தேர்ந்தாய்!
தில்லையிலும் மதுரையிலும் பணியை ஆற்றித்
தேமதுரத் தமிழ்காத்தாய்; தமிழி னத்தார்
தொல்மரபை, பெருமையினைத் துலங்கச் செய்தாய்!
துணைவேந்தர்பதவிக்கே பெருமை சேர்த்தாய் ;
நல்லியல்பால் இளையோரை வழிந டத்தி
நற்றமிழின் ஆர்வத்தைத் தூண்டி வந்தாய்!

அழகப்பர்கல்லூரி மேன்மை எய்த
ஆளுமையால் தமிழ்த்துறையைச் சிறக்கச் செய்தாய்!
அழகப்பர்அளவற்ற கொடையின் மாண்பை
அழகொளிரும் பாக்களிலே நிலைக்கச் செய்தாய்!
குழல்யாழும் தோற்கின்ற வண்ணம் காரைக்
குடியினிலே கம்பர்சீர்பரவச் செய்தாய்;
முழக்கமிட்டாய் அரிமாவாய்! அறிஞர்போற்றும்
மூதறிஞர்வ.சுப.மா என்றும் வாழ்வாய்!.